புதுச்சேரி அரசு

துணைநிலை ஆளுநர் செயலகம்

**No. LGS/PRO/2024** **26 மார்ச், 2025**

## பத்திரிகை செய்தி - 1

புதுச்சேரி எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம் சார்பில் திறன் மேம்பாட்டு பயிற்சி தொடக்க விழா ஓட்டல் சன்வே மேனரில் இன்று (26-03-2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு. K.கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், சுகாதாரத்துறை செயலர் திரு ஜெயந்த குமார் ரே, இயக்குனர் திரு டாக்டர் ரவிச்சந்திரன் மற்றும் மருத்துவ கண்காணிப்பாளர் திரு செவ்வேள் ஆகியோர் உடன் இருந்தனர்.

## பத்திரிகை செய்தி - 2

இப்தார் நோன்பு திறப்பு நிகழ்ச்சி ஆளுநர் மாளிகையில் இன்று (26-03-2025) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாஷ்நாதன் இப்தார் நோன்பு விருந்து அளித்தார். மாண்புமிகு முதலமைச்சர் திரு ந. ரங்கசாமி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு R. செல்வம், மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ஆ. நமச்சிவாயம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு க.லட்சுமி நாராயணன், மாண்புமிகு வேளாண் அமைச்சர் திரு க.ஜெயக்குமார், மாண்புமிகு குடிமைப்பொருள் வழங்கல் அமைச்சர் திரு PRN திருமுருகன், மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் திரு சாய் ஜெ. சரவணன் குமார், தலைமைச் செயலர் திரு சரத் சௌகான், காவல்துறை தலைமை இயக்குனர் ஷாலினி சிங், அரசு செயலர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள் மற்றும் வக்ஃபு வாரிய உறுப்பினர்கள், அதிகாரிகள் மற்றும் 350 க்கும் மேற்பட்ட இஸ்லாமிய சமூகத்தினர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.